GOVERNMENT COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
KUMBAKONAM – 612 001
*Affiliated to Bharathidasan University*
DST - CURIE Sponsored Institution
IV Cycle of Accreditation
Estd. 1963
0435 – 2401391
principal@gcwk.ac.in

# CRITERION II – TEACHING - LEARNING AND EVALUATION

## 2.1: Student Enrollment and Profile

### 2.1.1 Average Enrollment Percentage

**2.1.1.1: Number of seats filled year wise during last five years**
**2.1.1.2: Number of sanctioned seats year wise during last five years**

# *State Government Orders*

025559

சுருக்கம்

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2018–19–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 264 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குதல் மற்றும் உதவிப் பேராசிரியர் பணியிடங்களை தோற்றுவித்தல் – ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.120

நாள் 22.06.2018.
விளம்பி, ஆனி–08,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

படிக்கப்பட்டவை:–

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 13517/க்யூ3/2018, நாள். 07.06.2018

----------

ஆணை:–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 01.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் மற்றவற்றிற்கிடையே கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்:–

"2011–12ஆம் கல்வியாண்டு முதல் 2017–18ஆம் கல்வியாண்டு வரை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1232 புதிய பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. 2018–19ஆம் கல்வியாண்டில் 264 புதிய பாடப் பிரிவுகள் (68 இளங்கலை, 60 முதுகலை, 136 ஆராய்ச்சி) அறிமுகப்படுத்தப்படும். இப்பாடப்பிரிவுகளை கையாளுவதற்கு 683 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும். இதற்கென அரசுக்கு தொடரும் செலவினமாக 68 கோடியே 46 லட்சம் ரூபாய் ஏற்படும். இப்பாடப் பிரிவுகளின் தேவைக்கென 324 வகுப்பறை கட்டடங்கள், 50 ஆய்வகங்கள் மற்றும். பிற உட்கட்டமைப்பு வசதிகள் 62 கோடியே 75 லட்சம் ரூபாயில் அமைக்கப்படும்."

2. அதற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் புதிய பாடப்பிரிவுகள் மற்றும் அதற்கான பணியிடங்கள் தோற்றுவிப்பது குறித்த கருத்துருவில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

2018–19ஆம் கல்வியாண்டில் 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 75 இளநிலை, 53 முதுநிலை, 65 எம்.பில் மற்றும் 71 பி.எச்.டி. ஆகமொத்தம் 264 புதிய பாடப்பிரிவுகள் தொடங்குவதற்கு 2018–19ஆம் கல்வியாண்டிற்கு 270 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும், 2019–20ஆம் கல்வியாண்டிற்கு 273 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும், 2020–21ஆம் கல்வியாண்டிற்கு 150 உதவிப் பேராசிரியர் பணியிடங்களும் ஆக மொத்தம் 693 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை புதியதாக உருவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது என்றும், 2018–19ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் முதலாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 270 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.27,41,26,680/– (ரூபாய் இருபத்து ஏழு கோடியே நாற்பத்தொரு இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து அறுநூற்று எண்பது மட்டும்)

முதலாமாண்டுக்கு தொடர் செலவினமாகும், 2019–20ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் இரண்டாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 273 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.27,71,72,532/– (ரூபாய் இருபத்து ஏழு கோடியே எழுபத்தொரு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று முப்பத்து இரண்டு மட்டும்) இரண்டாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் மற்றும் 2020–21ஆம் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதால் மூன்றாமாண்டிற்கு இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுகளுக்கு 150 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்க சம்பளச் செலவினமாக ஓராண்டுக்கு ரூ.15,22,92,600/– (ரூபாய் பதினைந்து கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து அறுநூறு மட்டும்) மூன்றாமாண்டுக்கு தொடர் செலவினமாகும் என்றும் எனவே, இப்புதிய பாடப்பிரிவுகள் துவங்குவதற்கு அனுமதியும் மற்றும் அதற்கென உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் உரிய ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஆய்வு செய்த அரசு, அதனை ஏற்று 2018–19ஆம் கல்வியாண்டிலிருந்து இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 61 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 75 இளங்கலை, 53 முதுகலை, 65 எம்.பில் மற்றும் 71 பி.எச்.டி. ஆகமொத்தம் 264 புதிய பாடப்பிரிவுகளை துவங்குவதற்கும் மற்றும் இப்பாடப்பிரிவுகளை கையாளுவதற்கு மொழிப்பாடங்களுக்கென 88 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும் மற்ற பாடப்பிரிவுகளுக்கென 182 உதவிப்பேராசிரியர் பணியிடங்களும் ஆகமொத்தம் 270 உதவிப்பேராசிரியர் பணியிடங்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது:–

(1) தமிழ் பாடப்பிரிவில் உபரியாக உள்ள 4 பணியிடங்கள் (கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் உபரியாக உள்ள 2 பணியிடங்கள் மற்றும் விழுப்புரம் அரசு கலைக் கல்லூரியில் உபரியாக உள்ள 2 பணியிடங்கள்) மற்றும் ஆங்கில பாடப்பிரிவில் உபரியாக உள்ள 6 பணியிடங்கள் (கும்பகோணம் ஆடவர் கல்லூரியில் உபரியாக உள்ள 1 பணியிடம் மற்றும் புதுக்கோட்டை அரசு கலைக் கல்லூரியில் உபரியாக உள்ள 5 பணியிடங்கள்) பணிநிரவல் (Redeployment) அடிப்படையில் நிரப்பப்படவேண்டும். மற்ற பாடப்பிரிவுகளில் உபரி பணியிடங்கள் இருந்தால் இந்தமுறை பின்பற்றப்பட வேண்டும். அதன்படி தமிழ் பாடப்பிரிவுகளுக்கு 40 (44–4 உபரி) பணியிடங்களும் ஆங்கிலப் பாடப்பிரிவுகளுக்கு 38 (44–6 உபரி) பணியிடங்களும் மற்ற பாடப்பிரிவுகளுக்கு 182 பணியிடங்களும் ஆக மொத்தம் 260 புதிய பணியிடங்களுக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(2) மேற்கண்ட 260 புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்காக எதிர்பார்க்கப்படும் நிதிச் செலவினம் ஆண்டொன்றிற்கு ரூ.26,39,73,840/– ஒப்பளிக்கப்படுகிறது.

(3) 2018–19 முதல் 2020–21 வரை உதவிபேராசிரியர் பணியிடங்களை உருவாக்குவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) ஆடவர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் –103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்–AA கலைக்கல்லூரிகள் (ஆடவர்) – 01 சம்பளங்கள்" (த.தொ.கு.2202 – 03 – 103 AA –0109)

(ii) மகளிர் கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணக்கு தலைப்பு

"2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக் கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள்– AB கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 01 சம்பளங்கள்" (த.தொ.கு.2202 – 03 – 103 AB –0107)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத் துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதித் (வ.செ.பொ.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ" வின்படி இவ்வரசாணையுடன் நிதித் (வ.செ.பொது–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரிக்கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண்.32790/கல்வி–I/2018, நாள் 22.06.2018, அ.சா.எண்.32979/மைமஆபி/2018, நாள்.22.06.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.490 (நானூற்று தொண்ணூறு) பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக்கல்வி இணை இயக்குநர்கள் (கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
சார்ந்த கல்லூரி முதல்வர்கள் (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–1/35/15.

சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–15.
சார்ந்த கருவூல அலுவலர்.
நகல்:–
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உயர்கல்வித் துறை. சென்னை–9
நிதித் (கல்வி–I / வ.செ.பொது–I / வ.செ.பொது–II / சி.எம்.பி.சி.) துறை, சென்னை–9.
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

22/6/18
பிரிவு அலுவலர்
22/6/2018

021154

சுருக்கம்

கல்லூரிக் கல்வி – 2019–20–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் தேவை உள்ள பாடப்பிரிவுகளில் கூடுதலாக மாணவர்களை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (வாலாயம்) எண். 78

நாள் 03.06.2019.
விகாரி, வைகாசி–20,
திருவள்ளுவர் ஆண்டு, 2050.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (வாலாயம்) 66, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 20.06.2018.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.17545/எம்2/ 2019, நாள் 20.05.2019.

------

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2018–19–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ / மாணவிகளை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தும் இக்கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கு, சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள / சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்களிலிருந்தும் நகராட்சியிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மாணவ / மாணவிகள் அரசு கல்லூரிகளில் அதிகளவில் கல்வி பயில விண்ணப்பித்துள்ளனர் என்றும் இம்மாணவ மாணவிகள் அதிக கல்விக் கட்டணம் செலுத்தி தனியார் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயில மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும், மேலும் அரசு கல்லூரிகளில் 2019–20–ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கு அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மாணவ மாணவியர்களின் நலன் கருதி 2019–20–ஆம் கல்வியாண்டில் கூடுதலாக தேவையுள்ள பாடப்பிரிவுகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ மாணவியர்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்த அரசு, 2019–20–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவ மாணவியர்கள் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டிற்கு கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ

2...

கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர். சி.ஜோதி வெங்கடேசுவரன்,
எம்.எஸ்ஸி., எம்.பில்., பிஜிடிஜிஐஎஸ்எம்., பி.எச்.டி.,
கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ),
கல்லூரிக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து மண்டலக் கல்லூரிக் கல்வி
இணை இயக்குநர்கள்

ந.க.எண்.17545/எம்2/2019 நாள்: 04.06.2019

அய்யா/அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 2019–20ம் கல்வியாண்டு – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் மாணவர் சேர்க்கை அனுமதி அளித்து அரசாணை வெளியிட்டது – தொடர்பாக.

பார்வை: அரசாணை (வாலாயம்) எண். 78, உயர் கல்வி (ஜி1) துறை நாள் 03.06.2019.

பார்வையில் காணும் அரசாணை நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அவ்வாணையின்படி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2019–20 ஆம் கல்வியாண்டில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ / மாணவியர்கள் சேர்ப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இக்கூடுதல் மாணவர் சேர்க்கைக்கு சார்ந்த பல்கலைக் கழகங்களில் அனுமதி பெற வேண்டுமெனவும் தங்கள் மண்டல கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: மேற்படி

4/6/19

கல்லூரிக் கல்வி இயக்குநர் (பொ)

04/06/2019

415

அரசினர் மகளிர் கல்லூரி கும்பகோணம்
10 SEP 2020

சுருக்கம்

கல்லூரிக் கல்வி – 2020–21–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் தேவை உள்ள பாடப்பிரிவுகளில் கூடுதலாக மாணவர்களை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (வாலாயம்) எண்.69

நாள் 10.09.2020
சார்வரி, ஆவணி–25,
திருவள்ளுவர் ஆண்டு, 2051.

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (வாலாயம்) 78, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 03.06.2019.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.18821/எம்2/ 2020, நாள் 07.09.2020.

------

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2019–20–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ / மாணவிகளை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தும் இக்கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கு, சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள / சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்களிலிருந்தும் நகராட்சியிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மாணவ / மாணவிகள் அரசு கல்லூரிகளில் அதிகளவில் கல்வி பயில விண்ணப்பித்துள்ளனர் என்றும் இம்மாணவ மாணவிகள் அதிக கல்விக் கட்டணம் செலுத்தி தனியார் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயில மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும், மேலும் அரசு கல்லூரிகளில் 2020–21–ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கு அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மாணவ மாணவியர்களின் நலன் கருதி 2020–21–ஆம் கல்வியாண்டில் கூடுதலாக தேவையுள்ள பாடப்பிரிவுகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும், மாணவ மாணவியர்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்த அரசு, 2020–21–ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவ மாணவியர்கள் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டிற்கு கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ

2...

மாணவிகளை சேர்ப்பதற்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. இக்கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கு சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
முதல்வர், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(கல்லூரி கல்வி இயக்குநர் வழியாக).
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலைநேர்முக உதவியாளர்,
சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை–9.
இ.கோ./ உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பூ. சுதா
பிரிவு அலுவலர்
9/7/2020

சுருக்கம்

கல்லூரிக் கல்வி – 2021-22-ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கூடுதல் தேவை உள்ள பாடப்பிரிவுகளில் கூடுதலாக மாணவர்களை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (வாலாயம்) எண்.141 நாள் 06.09.2021.

ஸ்ரீபிலவ, ஆவணி – 21,

திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (வாலாயம்) 69, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் 10.09.2020.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.24440/எம்2/2021, நாள் 02.09.2021.

-----

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2020-21-ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 20% கூடுதலாகவும் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 20% கூடுதலாகவும் மாணவ / மாணவிகளை சேர்ப்பதற்கு அனுமதி அளித்தும் இக்கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கு, சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 17.08.2021 அன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு கூடுதல் மாணவர் சேர்க்கைக்கு 25 சதவிகிதமாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு அருகாமையிலுள்ள / சுற்றியுள்ள பெரும்பாலான கிராமங்களிலிருந்தும் நகராட்சியிலிருந்தும் பிற்படுத்தப்பட்ட பழங்குடியின மாணவ / மாணவிகள் அரசு கல்லூரிகளில் அதிகளவில் கல்வி பயில விண்ணப்பித்துள்ளனர் என்றும் இம்மாணவ/மாணவிகள் அதிக கல்விக் கட்டணம்

செலுத்தி தனியார் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் கல்வி பயில மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் மேலும், அரசு கல்லூரிகளில் 2021-22-ஆம் கல்வியாண்டிற்கு மாணவர் சேர்க்கைக்கு அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு மாணவ மாணவியர்களின் நலன் கருதி 2021-22-ஆம் கல்வியாண்டில் கூடுதலாக தேவையுள்ள பாடப்பிரிவுகளில் கலை பாடப்பிரிவுகளுக்கு 25% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 25% கூடுதலாகவும் மாணவ மாணவியர்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை பரிசீலித்த அரசு, 2021-22-ஆம் கல்வியாண்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவ மாணவியர்கள் சேர்க்கைக்கு அதிகளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ள நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இக்கல்வியாண்டிற்கு கலை பாடப்பிரிவுகளுக்கு 25% கூடுதலாகவும் அறிவியல் பாடப்பிரிவுகளுக்கு ஆய்வக வசதிக்கு ஏற்ப 25% கூடுதலாகவும் மாணவ மாணவிகளை சேர்ப்பதற்கு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. இக்கூடுதல் மாணவர்கள் சேர்க்கைக்கு சார்ந்த பல்கலைக்கழகங்களின் அனுமதி பெற வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
முதல்வர், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்
(கல்லூரி கல்வி இயக்குநர் வழியாக).
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை-9.
இ.கோ./ உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்